**இந்திய தூதரகம்**
**கோலாலம்பூர், மலேசியா**

## <u>2016-17ஆம் ஆண்டிற்கான புலம்பெயர்ந்த இந்திய மாணவர்களுக்கான கல்வி உபகார சம்பளம் (SPDC) டிசம்பர் 31, 2016 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது</u>

இந்தியாவில் இளங்கலை கல்வி மேற்கொள்ளும் புலம் பெயர்ந்த இந்திய வம்சாவளி நபர்கள் (PIOs), வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRIs) மற்றும் மலேசியாவில் பணி புரியும் இந்திய நாட்டவர்களின் பிள்ளைகளுக்கு 2016-17ஆம் ஆண்டிற்கான புலம்பெயர்ந்த இந்திய மாணவர்களுக்கான கல்வி உபகார சம்பளம் (SPDC) <u>டிசம்பர் 31 ,2016</u> ***<u>வரை நீட்டிக்கப்பட்டுள்ளது</u>*** என மலேசியாவிலுள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

2. மருத்துவம் மற்றும் மருத்துவம் தொடர்பான கல்விகளுக்கு இந்த கல்வி உபகார சம்பளம் ***<u>வழங்கப்படவில்லை</u>*** என்பது குறிப்பிடத்தக்கது.

3. புதிய வடிவில் மாற்றம் செய்யப்பட்ட இந்த கல்வி உபகார சம்பளம் (SPDC) பற்றிய தகவல்களை அறிய <http://indianhighcommission.com.my/spdc.html> என்ற இந்திய தூதரக அகப்பக்கத்தை நாடலாம்.

அ) 2015-16ஆம் ஆண்டில், இந்தியாவில் கல்வியை மேற்கொள்ளும் புலம் பெயர்ந்த இந்திய வம்சாவளி நபர்கள் (PIOs) மற்றும் வெளிநாடு வாழ் இந்திய (NRIs) மாணவர்கள் இந்த கல்வி உபகார சம்பளத்திற்கு (SPDC) விண்ணப்பிக்கலாம். இதற்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் **<u>டிசம்பர் 31, 2016ஆம் தேதிக்குள்</u>** <u>http://spdcindia.gov.in</u> என்ற அகப்பத்தில் விண்ணப்பிக்கலாம்.

ஆ) புலம் பெயர்ந்த இந்திய வம்சாவளி நபர்கள் (PIOs) மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்களின் (NRIs) மாத வருமானம் **US$4,000/ஆக** அதிகரிக்கப்பட்டுள்ளது.

இ) விண்ணப்பதாரர்கள், இந்திய வம்சாவளி நபர் என்ற உறுதிமொழியைத் தவிர, அங்கீகரிக்கப்பட்ட தேவையான அனைத்து ஆவணங்களையும் இணையத்தில் பதிவேற்றம் செய்யலாம். தாங்கள் ஒரு இந்திய வம்சாவளி நபர் என்று இந்திய தூதரகத்தால் அங்கீகரிக்கப்பட்டு, அதனை <u>http://spdcindia.gov.in</u> என்ற SPDC அகப்பக்கத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

ஈ) வெளிநாடு மாணவர்களுக்கான நேரடி நுழைவு திட்டத்தின் கீழ் (DASA) இயங்கும் தேசிய தொழில்நுட்பக் கழகம் (National Institutes of Technology-NITs), இந்திய தொழில்நுட்பக் கழகம் (Indian Institutes of Technology-IITs), திட்டமிடல் & கட்டிடக்கலை பள்ளிகள் (Schools of Planning and Architecture -SPAs) மற்றும் பிரீமியர் தொழில்நுட்ப நிறுவன (Other Premier Technical Institutions) மாணவர்கள் இந்த கல்வி உபகார சம்பள விண்ணப்பத்திற்குத் தகுதியானவர்கள். வெளிநாடு மாணவர்களுக்கான நேரடி நுழைவு திட்டத்தின் கீழ் இளங்கலை கல்விக்கான நிறுவன பட்டியலை கீழ்காணும் இந்திய தூதரக அகப்பக்கத்தில் பெற்று கொள்ளலாம்.

<u>http://indianhighcommission.com.my/pdf/DASA2016InstitutesUG.pdf</u>

4. புலம் பெயர்ந்த மாணவர்களுக்கான கல்வி உபகார சம்பளம் (SPDC) பற்றிய மற்ற தகவல்கள் யாவும் மாற்றம் காணவில்லை. இதை பற்றிய மேல் விவரங்களுக்கு <u>http://indianhighcommission.com.my/spdc.html</u> என்ற அகப்பக்கத்தை நாடவும்.